முச்சந்தி முரளி



"அமெரிக்கன் குறும்பன், ஏதோ பெரிசா பிளான் பண்றான் போல"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 333

வியாழக்கிழமை
24 ஒக்ரோபர் 2024

ஐப்பசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

இலங்கையில் உள்ள

# அறுகம்குடா பிரதேசத்தில் பயங்கரவாத அச்சுறுத்தல்

**அமெரிக்கா நேற்று எச்சரிக்கை**

**பாதுகாப்பு பலமடங்கு அதிகரிப்பு**

**இரவிரவாக வாகனங்கள் சோதனை**

**விசேட அதிரடிப்படையினர் குவிப்பு**

**மட்டக்களப்பு, ஒக்ரோபர் 24**

**மட்டக்களப்பு அறுகம்குடா பகுதியில் சுற்றுலாத் தலங்களை இலக்குவைத்து பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அங்கு உச்சக்கட்டப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.**

11

## இலங்கையில் மிக அவதானம்

### வெளிநாட்டு தூதரகங்கள் பாதுகாப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 24

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சுகள் இலங்கை தொடர்பில் பயண எச்சரிக்கையை விடுத்

11

## இலங்கையிலிருந்து உடன் வெளியேறுக

### இஸ்ரேலியர்களுக்கு வந்தது உத்தரவு

டெல்அவிவ், ஒக். 24

மட்டக்களப்பு - அறுகம்குடா பகுதியில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து, இலங்கையில் இருந்து வெளியேறி உடனடியாக நாடு திரும்புமாறு இஸ்ரேலியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அறுகம்குடா பகுதியில் இஸ்ரேலியர்கள் அதிகம் நடமாடும் பகுதிகளையும், இஸ்ரேலியர்களால் அமைக்கப்பட்டுள்ள கட்டடமொன்றையும் இலக்கு

11

## வடக்கின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பதற்குத் தயார்



### ஆளுநர் வேதநாயகனிடம் அமெ. தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக, வடமாகாண ஆளுநர் வேதநாயகனிடம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

11



## வேட்பாளர் சுகவீனமுற்று உயிரிழப்பு

விரிவு :- பக். 11

## சிறைக்கூண்டுக்குள் தற்கொலை முயற்சி

### பருத்தித்துறை நீதிமன்றத்தில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர், நீதிமன்ற சிறைக்கூண்டுக்குள் தனது கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முயன்ற சம்பவம்

11

வன்னியில் நிராகரிக்கப்பட்ட

## வேட்புமனுவை ஏற்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஒக். 24

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் தாக்கல் செய்த வேட்புமனுவை உடனடியாக ஏற்றுக்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

11

## போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் - ஏழாலை கிழக்குப் பகுதியில் இளைஞர் ஒருவரிடமிருந்து பெருமளவு போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

11

## நாய் குறுக்கே பாய்ந்ததால் பறிபோன இளைஞரின் உயிர்

யாழ்ப்பாணம், ஒக். 24

விபத்தில் படுகாயமடைந்த இளைஞரொருவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு - வெலி ஓயா, கிரிபன்னா பகுதியைச் சேர்ந்த எஸ்.எல்.சம்பத்குமார (வயது-21) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

11

## முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் கைது!

கொழும்பு, ஒக். 24

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

11

தேசிய மக்கள் சக்தி அரசில்

## வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படுவார் சுமந்திரன்



### கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 24

ஜனாதிபதி அநுரவின் அமைச்சரவையில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரன் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
சனநாயக தமிழரசு கூட்டமைப்பு
X 2
மாற்றத்தின் விதை மாம்பழம்
சுயேட்சை குழு - 14

ஈஸ்வரபாதம் சரவணபவன்

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடன் ஜனநாயக த.தே.கூட்டமைப்பு பேச்சு!

யாழ்ப்பாணம், ஒக்.24

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகவும் ஐரோப்பிய யூனியன் தெற்காசியப் பிராந்திய இலங்கைக்கான பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஐரோப்பிய யூனியன் தெற்காசியப் பிராந்திய இலங்கைக்கான பிரதிநிதிகளுக்கும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்களுக்கு மிடையில் இணைய வழிக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் தற்போதைய அரசாங்கத்தின் இயலாமைகள் தொடர்பாகச் சுட்டிக்காட்டினோம். தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற தோரணையிலும், 13ஆவது திருத்தம் கூடத் தேவையில்லை என்ற தோரணையிலும் அவர்கள் பேசி வருவது தொடர்பில் எடுத்துக்கூறினோம்.

அரசியல் அதிகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் எந்தக் கரிசனையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலைமை தொடர்ந்தால் தமிழ் மக்களுக்கும் தற்போதைய அரசாங்கத்துக்குமான இடைவெளி அதிகரிக்கும் என்பதையும் சுட்டிக்காட்டினோம். இலங்கையில் நல்லெண்ணச் செயற்பாடுகள் திட்டமிட்டவாறு நடக்கவில்லை. போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பெண் தலைமைக் குடும்பங்களுக்கு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக குறைந்தபட்ச நடவடிக்கையோ, பொறிமுறையோ உருவாக்கப்படவில்லை என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டினோம்.

இந்த விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்துவது என இந்தக் கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டது - என்றார். (ஏ-இ)

## மார்பகப் புற்றுநோய்: விழிப்புணர்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 24

தேசியப் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுச் சபையின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், யாழ். மாவட்டத்துக்கான நடைபவனி இன்று காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் ஆரம்பமாகி யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-66)

பாராளுமன்றத்தேர்தல் 2024
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
வைத்திலிங்கம் குகதாஸ்
B.A (COL.PGDM (S.J), PGDM (RU), SLACS CLASS I
ஓய்வுநிலை கணக்காளர் (வட மாகாணம்)

8 X
அகில இலங்கை தமிழர் மகா சபை

## அரசாங்க ஊழியர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்குக

### முன்னாள் ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

**கொழும்பு, ஒக். 24**

**அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் தாம் எடுத்த அமைச்சரவை தீர்மானத்தை சமகால அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.**

தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே, முன்னாள் ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நாம் தீர்மானம் எடுத்திருந்தோம். அனைத்து அரச ஊழியர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்து சம்பள அதிகரிப்பை வழங்க தீர்மானித்திருந்தோம். அதற்கான நிதியொதுக்கீட்டுப் பரிந்துரைகளையும் நாம் முன்வைத்திருப்பதால், அரச ஊழியர்களின் சம்பளம் உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (ம)

## வாசிப்பு மாத இறுதி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 24

வலி. கிழக்கு பிரதேசசபைக்கு உட்பட்ட உரும்பிராய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

உரும்பிராய் கற்பக விநாயகர் மணிமண்டபத்தில் உரும்பிராய் உப அலுவலக பொறுப்பதிகாரி இ.சிவரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் பிரதம விருந்தினராகவும் உரும்பிராய் சமூகமேம்பாட்டு ஒன்றியத் தலைவர் மருத்துவர் வே. கணேசவேள், ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் இரா. ஜெயக்குமார், உரும்பிராய் தெற்கு கிராம சேவையாளர் செ.வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## சுவிஸ் தூதரகக் குழு மன்னாரில் ஆராய்வு

மன்னார், ஒக்.24

மன்னார் சிவில் நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் சுவிஸ் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார சமாதான அபிவிருத்திக்கான குழுவின ருக்கும் இடையிலான சந்திப்பு 'மெசிடோ' என அழைக்கப்படும் சமூக மேம்பாட்டு நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது தற்போதுள்ள அரசியல் நிலைப்பாடு, பொருளாதாரம், மன்னார் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன. (ரி-60,56)



## ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீடு நாளை

யாழ்ப்பாணம், ஒக்.24

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் 'ஞானச்சுடர் சஞ்சிகை' ஐப்பசிமாத வெளியீட்டு நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சமாதான நீதிவான் ஐ.கோ.சந்திரசேகரம் சஞ்சிகையின் வெளியீட்டுரையையும், சைவப்புலவர் கந்த சத்தியதாசன் மதிப்பீட்டுரையையும் ஆற்றுவர். (ரி-66)

## தமிழ்க்கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை

### கஜதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக இல்லை என்பது மக்களின் ஆதங்கமாக உள்ளது என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான கஜதீபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது அணி கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்து ஒரு பெரிய அளவிலான கட்டமைப்பை உருவாக்கி வேலைசெய்து வருகின்றது.

இந்தப் பிரதேச மக்கள் மிகப்பெரிய அளவிலான பிரச்சினைகளை எம்முடன் பகிர்ந்திருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இங்கு செயற்பட்டவர்கள் பலவீனமாகவே நடந்துள்ளார்கள் என்பது இதனூடாகப் புலப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# போஷாக்குக் குறைபாட்டால் நாட்டில் 10,323 சிறுவர்கள்

**கொழும்பு, ஒக்.24**

**இலங்கையில் ஐந்து வயதுக்குட்பட்ட 10,323 சிறுவர்கள் கடுமையான போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக குடும்ப சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அந்தப் பணியகம் விடுத்த அண்மைய அறிக்கையில், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளிலும், ஒன்று முதல் இரண்டு வயது வரையிலான குழந்தைகளிலும், இரண்டு முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளிலும் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்துள்ளது. இந்த மதிப்பீட்டில், நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எடையில் குறைவு ஏற்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 15,763 ஆக இருந்தது- என்றுள்ளது. (ச-இ)



# மாட்டை இறைச்சியாக்கி வீதியில் வீசிய விஷமிகள்

கிளிநொச்சி, ஒக்.24

மாட்டின் இறைச்சியை எடுத்துவிட்டு கழிவுகளை கிணறு மற்றும் பொது இடங்களில் வீசியமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீடொன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாட்டைக் கடத்திச் சென்ற திருடர்கள் அதனைக் கொன்று இறைச்சியை மட்டும் எடுத்துக்கொண்டு மிகுதிக் கழிவுகளை முல்லை வீதிக்கு அருகில் இருந்த கிணறு மற்றும் பொது இடங்களில் வீசிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 113)

# சுன்னாகத்தில் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 24

சுன்னாகம் பொதுநூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தும் பிரதேச ஓவியர் சி.சந்திரசுபநேமியின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காட்சி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கண்காட்சி நிகழ்வில் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச- 66)

நாணயநிதியத்துடன்

# 3 ஆவது மீளாய்வு இலங்கை தயார்!

கொழும்பு, ஒக்.24

சர்வதேச நாணயநிதியத்தின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான வேலைத்திட்டத்தின் மூன்றாவது மீளாய்வு தொடர்பிலான கலந்துரையாடல்களுக்கு இலங்கை அரசாங்கம் தயாராக இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன அறிவித்துள்ளார். நுண்பொருளாதார மறுசீரமைப்புத்திட்டத்துக்கான அர்ப்பணிப்பை இலங்கை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் 3 ஆவது மீளாய்வு தொடர்பிலான கலந்துரையாடல்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழாக் காணும் முகாமைத்துவக் கற்கைகள்

யாழ்ப்பாணம், ஒக்.24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீட கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது 50ஆவது வருட நிறைவில் பொன் விழாக்காணும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுகிறது.

முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிகபீடம் காலத்தின் தேவைகருதி 1999 இலிருந்து வியாபார நிர்வாகமாணியில் கணக்கியல், நிதிமுகாமைத்துவம், மனிதவளம், சந்தைப்படுத்தல் துறைகளில் சிறப்புப் பட்டத்தை வழங்கிவருவதுடன் கடந்த ஆண்டிலிருந்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் சிறப்புப் பட்டத்துக்கான கற்கைநெறியையும் ஆரம்பித்துள்ளது. அத்துடன் வணிகமாணியில் கணிக்கியலும் நிதியும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் சிறப்புப் பட்டத்தினையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-26)



## 'செம்பருத்தி' மலர் வெளியீட்டு விழா!

யாழ்ப்பாணம்,ஒக்.24

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப்பேரவையின் பிரதேச மலரான 'செம்பருத்தி' மலர் - 2 பருத்தித்துறையில் கடந்த புதன்கிழமை வெளியீடு செய்யப்பட்டது.

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும் நிதி அனுசரணையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் வடமராட்சி வடக்கு கலாசார பேரவையும், கலாசார அதிகாரசபையும் இணைந்து நடத்திய வடமராட்சி பண்பாட்டு விழாவில் பிரதம விருந்தினராக பங்கேற்ற யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா மலரை வெளியிட்டு வைத்தார். (ச-45-100)

## குருபூஜை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.24

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவஸ்ரீ. பாலதிருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், மாதத்தோறும் ஈழத்துச் சித்தர்கள் குருபூஜையும் தொடர் 6 கடையிற் சுவாமிகள் குருபூஜை நிகழ்வு பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும்," "வணங்கவேண்டிய கடையிற் சுவாமிகள்'' எனும் தொனிப்பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் பொன். சந்திரவேலின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (ரி)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.24

நீர்வேலி பொதுநூலகம் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை உப அலுவலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி கனகரத்தினம் சுமரதன் தலைமையில் அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.24

இலங்கைத் தமிழ் மக்களின் தேசபிதா மூதறிஞர் தந்தை செல்வாவின் 125ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை "எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழ்த் தேசியவாதமும்" எனும் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீடு யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஸ்ரீமான் சாய் முரளி தலைமையில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

நூல் மதிப்பீட்டுரைகளை கொழும்புப் பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தமிழிலும் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல்துறை பேராசிரியர் உபுல் அபேரத்ன ஆங்கிலத்திலும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செல்வநாயகம் அறக்கட்டளையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-45)

வடமாகாணக் கல்வி அமைச்சும், தொழில்துறை அமைச்சும் இணைந்து தொழில் முனைவோருக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்புகளை மூளாய் அபிவிருத்தி அமையத்தில் நடத்தியுள்ளனர். பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் வலி.மேற்கு பிரதேசசெயலர், வடமாகாணக் கல்வி அமைச்சின் உபசெயலாளர், தொழில்துறை அமைச்சின் அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மூளாய் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து சிறப்பித்துள்ளனர். (ச-25.20)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். வீண் அலைச்சல் ஏற்படும். உடல் அசதி உண்டாகவும் கூடும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சலுகைகள் கிடைக்கும். பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சலுகைகள் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். தொல்லைகள் விலகும்.உங்கள் யோசனையை குடும்பத்தினர் ஏற்றுக் கொள்வார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இலாபம் எதிர்பார்த்தபடியே இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**துலாம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணிச்சுமை அதிகரிக்கும். சக பணியாளர்களின் உதவி கிடைப்பதால் உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பணிகளை உற்சாகமாகச் செய்வீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு குடும்பம் தொடர்பான பணிகளுக்காக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உண்டாகும். இலாபம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கைக்கு இன்னொரு ஆபத்து

'இலங்கையில் அதிகளவான வெளிநாட்டுச் சுற்றுலாவிகள் கூடுகின்ற இடமான அறுகம்பே பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கக்கூடிய சாத்தியங்கள் இருப்பதால், அமெரிக்கப் பிரஜைகள் அங்கு செல்வதைத் தவிர்க்கவும்' என்ற அபாய அறிவிப்பால் கதிகலங்கிப் போயிருக்கின்றது அநுர அரசாங்கம். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக வந்த பின்னர் புதிய பொருளாதாரத் திட்டங்கள் எதனையும் நடைமுறைப்படுத்தாமல், ரணில் போன பாதையிலேயே தானும் வண்டில் விடத் தொடங்கியிருந்தார். வெளிநாட்டுக் கடன்களை வாங்குதல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் என்பனவே ரணிலின் பொருளாதாரத் திட்டங்களாக இருந்தன. அதனையே அநுரவும் பின்பற்றத் தொடங்கினார். ஆனால் சுற்றுலாத் துறையை ஆட்டம் காணவைப்பது போல வந்து சேர்ந்திருக்கிறது அமெரிக்காவின் அறிவிப்பு. அறுகம்பேக்கு போகாதீர் என்றாலே அமெரிக்கர்களில் அநேகர் இலங்கையை விடுத்து மாலைதீவு போன்ற வேறு நாடுகளுக்கு தமது பயணத்திட்டத்தை மாற்றிவிடுவார்கள். அமெரிக்கர்களே போக அச்சப்படும் இடத்துக்கு ஏனைய நாட்டு சுற்றுலாவிகளும் பயணப்படத் தயங்கவே செய்வர். அதனால் வரும் நாட்களில் இலங்கையின் சுற்றுலாத்துறை மரண அடி வாங்கப் போகின்றது என்பது மட்டும் நிச்சயம். இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இந்தப் பயண எச்சரிக்கையை அமெரிக்கா இப்போது விடுத்ததன் காரணம் உண்மையிலேயே தாக்குதல் அச்சமா? அல்லது அநுர அரசாங்கத்துக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் இப்படி அச்சத்தை அமெரிக்கா திட்டமிட்டுத் தோற்றுவித்ததா? என்ற கேள்விகளும் எழவே செய்கின்றன.

ஆனால் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் அறிக்கைகளும், சமூக ஆர்வலர்களின் அவதானிப்புகளும் அறுகம்பே விடயத்தை அமெரிக்கா வலிந்து உருவாக்கவில்லை என்ற முடிவுக்கே வரவைக்கின்றன. சிலவாரங்களுக்கு முன்னர் அறுகம்பே பகுதிக்கு சமூக ஆர்வலரான ருக்கி பெர்னாண்டோ சென்றிருந்தார். அவர் அங்கே கண்ட சில விடயங்கள் கொஞ்சம் உறுத்தலாக இருந்ததால் அவற்றை தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவிடவும் செய்தார். அறுகம்பே இலங்கையர்களின் பகுதி என்பதை விடவும் அதை குட்டி இஸ்ரேல் என்று சொல்லலாம் போலிருக்கிறது. ஒருசில கட்டடங்கள் முழுதும் இஸ்ரேலியர்களே வசிக்கிறார்கள். அதை அவர்கள் சொந்தமாக வாங்கிவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் இஸ்ரேலியர்களே. அவர்களுக்கென ஹிப்ரு மொழியில் கடைகளும், விடுதிகளும் தோன்றிவிட்டன. அவ்வளவு ஏன், அவர்களின் வழி பாட்டுத்தலம் கூட இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 'சிக்கலான விடயம் என்னவென்றால் இந்த இஸ்ரேலிய வழிபாட்டுத்தலம் முஸ்லிம் மக்கள் செல்லும் பாதையின் நடுவே இருப்பதுதான்' என்ற சாரப்பட அவர் தான் கண்ட விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார். இதனை வைத்துப் பார்க்கும்போது, முஸ்லிம் மக்களின் வாழ்விடங்களை குறுக்கீடு செய்வது போல இஸ்ரேலியர்களின் நடமாட்டங்களும், வழிபாடுகளும் அறுகம்பேயில் ஆரம்பமாகியுள்ளன என ஊகிக்கலாம். இதனால் சீற்றமுற்றோ அல்லது பலஸ்தீனம், லெபனான், ஈரான் போன்ற நாடுகளில் இஸ்ரேல் நடத்தும் ஈவிரக்கமற்ற தாக்குதல்களுக்கு பழிவாங்கும் வகையிலோ அறுகம்பேயில் உள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடிய ஏதுநிலைகள் இருப்பதாக அமெரிக்கா கருதுகின்றது. இதனாலேயே இப்படி ஒரு பயண எச்சரிக்கையை அது விடுத்துள்ளது. ஆனால் ஒருவேளை ஒரேகல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் வகையில், அநுர அரசுக்கு குடைச்சல் கொடுப்பதற்காகவும் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களின் வாக்குவங்கியை அசைப்பதற்காகவும் இந்தச் சமயத்தில் 'அறுகம்பேயில் தாக்குதல் நடக்கலாம்' என்ற கல்லை அமெரிக்கா எறிந்திருக்கலாம்.

அமெரிக்காவின் இந்த எச்சரிக்கைக்கு உடனடியாகவே எதிர்வினையாற்றி, அறுகம்பேயில் பொலிஸாரையும், விசேட அதிரடிப்படையினரையும் குவித்து பாதுகாப்பை அரசாங்கம் பலப்படுத்தியிருக்கிறது. ஆனாலும் அமெரிக்கா, இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மனமகிழ்ந்து போய் உடனடியாக தன் பயண எச்சரிக்கையை நீக்கி விடாது, அதற்குச் சிலகாலம் எடுக்கும். அதுவரையில் இலங்கையின் சுற்றுலாத்துறை நொடிந்திருக்க வேண்டியது தான். இந்த விவகாரத்தில் இலங்கையர்கள் அச்சப்படுமளவுக்கு இன்னொரு விடயமும் இருக்கின்றது. எல்லோரும் இலங்கை வெகுவிரைவில் சீனாவின் காலனித்துவ நாடாக மாறிவிடும் என்றிருக்க, அறுகம்பே இஸ்ரேலின் குடியிருப்பாக மாறிக்கொண்டிருப்பது ஆரோக்கியமான விடயமல்ல. இப்படித்தான் அவர்கள் பலஸ்தீனத்திலும் குந்தியிருக்க வந்துவிட்டு, அந்த நாட்டையே விழுங்கியவர்கள். எதற்கும் இலங்கை இந்தத் தாக்குதல் முன்னெச்சரிக்கை குறித்தும், இஸ்ரேலியர்களின் கட்டுக்கடங்காத வருகை குறித்தும் கவனமாக இருப்பது நல்லதே.




# பொதுத்தேர்தல் 'பட்ஜெட்' வேட்பாளர்கள் அவதானம்

**கொழும்பு, ஒக்.24**

**பொதுத்தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தேர்தல் பிரசார செலவுகள் தொடர்பிலான குறிப்புகளை முறையாகப் பேணவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு நினைவூட்டியுள்ளது.**

தேர்தல் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மற்றும் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் யோசனைகளுக்கு அமைவாகவே தேர்தல் செலவுத் தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசார செலவுத் தொகை மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும். தேர்தல் முடிவுகள் வெளியாகி 21 நாள்களுக்குள் செலவினம் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கவேண்டும். செலவுகளைச் சமர்ப்பிக்காவிடின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## தபால் ஊழியர்களின் விடுமுறை இரத்து

கொழும்பு, ஒக்.24

தபால் ஊழியர்களின் விடுமுறை பொதுத்தேர்தல் முடியும் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்றுப் புதன்கிழமை முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறையும் இரத்துச் செய்யப்படுவதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டார். (ச)

## எய்ட்ஸ் நோயாளர்கள் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, ஒக். 24

அநுராதபுரம் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகப் பாலின நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் அஜித் கரவிட்ட தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் அநுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரம் 17 எய்ட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தாயின் மூலம் எய்ட்ஸ் நோய் பரவியதாக கூறப்படும் 5 குழந்தைகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ச)

## 50,000 கடவுச்சீட்டுகள் கையிருப்பில்



கொழும்பு, ஒக்.24

நாட்டில் இந்த வாரத்துக்குத் தேவையான 50 ஆயிரம் கடவுச்சீட்டுகள் இருப்பில் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

நவம்பர் மாதத்தின் இடைப்பகுதியில் மேலும் ஒரு இலட்சம் கடவுச்சீட்டுகள் நாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## சோளம் இறக்குமதி குறைப்பு

கொழும்பு, ஒக்.24

அடுத்த வருடம், சோளம் இறக்குமதியை ஒரு லட்சத்து 50,000 மெற்றிக் தொன்னாக குறைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (ச)

### நாளை

25.10.2024

வெள்ளிக்கிழமை - ஐப்பசி - 08

சுபநேரம் : 06.02- 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02


### நாளொரு நல்வார்த்தை

பெரிய எண்ணங்களை சிந்தனை செய்;
ஆனால் சிறிய இன்பங்களுக்கு
சந்தோஷப்படு.

- ஜாக்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழ்



தோற்றம் 06 . 06 . 1961

மறைவு 24 . 09 . 2024

### அமரர் உயர்திரு முருகேசு சேரழகன்

(ஓய்வுநிலை ஆசிரியர்)

மறைந்தாலும் எங்கள் நெஞ்சில் வாழ்ந்து கொண்டிருக்கும் செல்ல அப்பா!
எங்கள் தந்தையாக மட்டுமல்லாது ஒரு நண்பனாய் ஆசானாய் எல்லா
தருணங்களிலும் எங்களுடன் எங்களுக்காகவே இருந்தீர்கள் அப்பா!
வழிகாட்டுதல் தேவைப்படும் போதெல்லாம் மனம் உங்களைத்தேடுது அப்பா
கல்வி என்ற ஒன்று சமம் என கால நேரம் பாராது நீங்கள் கற்பித்த அனைத்து
மாணவர் நெஞ்சத்திலும் நீங்காத இடத்தில் மறைந்து வாழ்கின்றீர்கள் அப்பா
ஓயயாமல் நினைவுகள் தொடர்ந்து வர ஆறாத்துயரில் உங்களை
நினைவுகூறுகிறோம் அப்பா!


அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 24.10.2024 வியாழக்கிழமை (இன்று) காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்நது அன்னாரது இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள **லட்சுமி பிளாசா மண்டபத்தில்** நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இல 105,
ஐயனர் கோவில் வீதி
தட்டாதெரு யாழ்ப்பாணம்

இங்ஙனம்
குடும்பத்தினர்
076 549 6846, 076 410 7966

(CS 1684) V-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05. 05. 1971

மறைவு 23. 10. 2024

### அமரர் நடராஜா இராஜேஸ்வரன்

அன்னாரின் பிரிவால் துயறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அன்னாரின் பிரிவின் துயரில்
கொனிக்கா கலர் லாப், சிறிராம் ஜீவல்லர்ஸ்
உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்

(CR 1681) P-1

## மரண அறிவித்தல்



மலர்வு 05 . 05 . 1971

உதிர்வு 23 . 10 . 2024

### அமரர் நடராசா இராஜேஸ்வரன்.

(அபிவிருத்தி இணைப்பாளர். பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்)

"ஈஸ்வரபவனம்" கதிர்காம கோவிலடி வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல-92, யாழ்றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நடராசா இராஜேஸ்வரன் அவர்கள் நேற்று(23.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நடராசா-நாகேஸ்வரி தம்பதயரின் அன்பு மகனும்,காலஞ் சென்றவர்களான வீரசிங்கம்-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் உஷாநந்தினி அவர்களின் அன்புக்கணவரும், நிகாஷன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி-ஆண்டு-10 மாணவன்)அவர்களின் பாசமிகு தந்தையும் , ஈஸ்வரன், தயாளேஸ்வரன் (டென்மார்க்), சிவனேஸ்வரன் (கனடா), ஜெகதீஸ்வரி (நியூசிலாந்து), சர்வேஸ்வரன் (பிரதிதிட்டமிடல் பணிப்பாளர்,பிரதேசசெயலகம்,யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபை,கரவெட்டி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), விமலரதி, நித்தியகலா, ஸ்ரீதரன் (சிறிராம்-ஜீவல்லர்ஸ் கொனிக்காகலர் லாப்), விஜயகுமாரி, ரவீந்திரகுமார் (லண்டன்), ஜெயசீலன் (சானுகா ஜீவல்லர்ஸ்), ஸ்ரீசக்திவேல் (சிறீமீனாட்சி ஜீவல்லர்ஸ்), நிகிலா ஆகியேரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.10.2024) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல:94,யாழ்றோட்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 8407
077 749 9404(மகன்)

(CA 1681) P-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி கலாவதி பூலோகசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை,
பகுதித் தலைவர்-
யாழ்.இந்துமகளிர் கல்லூரி

*(திதி: ஐப்பசி மாத அபரபட்ச அட்டமி - 24.10.2024)*

அன்னை மடியில் 18.02.1951

சிவனடியில் 18.10.2022

ஈர் ஐந்து மாதங்கள்
எம்மை சுமந்து பெற்ற
உங்களை இழந்து
ஈராண்டு ஆனதுவோ அம்மா
நித்தமும் எம் விழிகளில்
கண்ணீர் சிந்த வைத்து
எம் இதயத்தில் செந்நீர்
கசிய வைத்த எமையெல்லாம்
தவிக்கவிட்டு இவ்வுலகை நீங்கி
ஈராண்டு ஆனதுவோ!!!
வண்ணை வைத்தீஸ்வரனின்
பாதங்களில் உங்கள் ஆத்மா
இளைப்பாற அவனை
வேண்டுகின்றோம் அம்மா

கணவன், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்

ஏழாலை மேற்கு
ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தமேடையிலும் அரியநேந்திரன் ஏறலாம்

## தடுப்பதற்கு சாணக்கியன் யார்? சரவணபவன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக்.24**

**எந்த மேடையிலும் ஏறிப் பிரசாரம் செய்வதற்குரிய ஜனநாயக உரிமை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட அரியநேந்திரனுக்கு உண்டு. இது கட்சிமேடையல்ல. இதனை இரா.சாணக்கியன் உணர்ந்துகொள்ளவேண்டும்.**

-இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சுயேச்சைக் குழு 14 இல் சனநாயக தமிழரசுக் கூட்டமைப்பு கட்சியில் போட்டியிடும் வேட்பாளருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், 'இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளரான சிறிநேசன்,

பா.அரியநேந்திரனை பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவோ, கட்சியின் நிகழ்வுகளில் ஈடுபடுத்தவோ கூடாது எனவும் அவர் தமிழரசுக் கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர் என்றும் சாணக்கியன் கூறியுள்ளார். இது குறித்து தங்களது கருத்து என்ன என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரசார மேடையில் யாரும், யாருக்காகவும் பேசலாம், யாருக்கும் ஆதரவு வழங்கலாம். அனைவரும் இப்போது சாதாரணமானவர்களே. எனக்கு ஆதரவாக கடந்த காலங்களில் விடுதலைப் போராளிகள் மேடையேறி பேசினார்கள், இனியும் பேசுவார்கள். எனவே கட்சிக்கும், ஒழுக்காற்று நடவடிக்கைக்கும், பிரசார நடவடிக்கைகளுக்கும் சம்பந்தமில்லை. இந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற நிர்வாகிகள் தமக்கு ஏற்ற நேரத்தில் ஒரு வருடத்திலும் முடிப்பார்கள். ஏனென்றால் இதற்கு 10 வருடங்களுக்கு முன்னர் சுமந்திரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை கொண்டு வரப்பட்டது. எனவே இவற்றை எல்லாம் பொருட் படுத்தக் கூடாது. அரியநேந்திரனுக்கு எல்லா ஜனநாயக உரிமைகளும் உள்ளன. எந்த மேடையிலும் ஏறி யாருக்கு ஆதரவாகவும் பிரசாரம் செய்யலாம், இது கட்சி மேடை அல்ல என்பதை சாணக்கியன் புரிந்துகொள்ள வேண்டும்- என்றார். (ச-27)

# துஷ்பிரயோகம் பிக்கு கைது



கொழும்பு, ஒக்.24

கலவான பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் 5 மாணவர்களை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் விகாரை ஒன்றின் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுவர்கள் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு தெரியப்படுத்தியதையடுத்து பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# பயிர்ச்சேத நிவாரணம் புதிய திட்டம் அறிமுகம்

கொழும்பு, ஒக்.24

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் எதிர்பாராத பயிர்ச்சேதங்களுக்கு நிவாரணமளிக்கும் பொதுவான செயற்றிட்டமொன்றை இலங்கை - இந்தியா இரு நாடுகளுக்கும் பொதுவாக உலக உணவுத்திட்டம் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தத் திட்டத்தில் இலங்கை சுற்றாடல்,வனவள,நீர்விநியோக மற்றும் பெருந்தோட்ட அமைச்சு, இந்திய சுற்றாடல் மற்றும் காலநிலை அமைச்சு என்பன உள்வாங்கப்பட்டுள்ளன.

இதற்கென 14 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. மோசமான காலநிலை காரணமாக வாழ்வாதாரம் பாதிப்படையும் இரு நாடுகளிலுமுள்ள கிராமப்புற விவசாயிகளில் குறிப்பாக பெண்களுக்கு நிவாரணமளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமென உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெரால்ட் ரெபெல்லோ தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# பல்கலை மாணவன் உயிரிழப்பு



கொழும்பு, ஒக்.24

களனி பல்கலைக்கழக மாணவன் ஒருவர் பல்கலைக்கழக விடுதியின் மேல்தளத்தில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன், கொலை செய்யப்பட்டாரா அல்லது உயிர்மாய்த்துக் கொண்டாரா என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நல்லாட்சிக் கால அரசில் முறைகேடாக நிதியொடுக்கீடு

## விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக்.24

நல்லாட்சி அரசாங்கத்தில் விவசாய அமைச்சுக்கென ராஜகிரியவில் குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டடத்துக்கு 660 மில்லியன் ரூபா வைப்புச்செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது தொடர்பான பதிவுகள் எதுவும் இல்லை. இந்தப்பணத்துக்கு என்ன நடந்தது? என விவசாய அமைச்சின் செயலர் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கணக்கறிக்கையின்படி பாவனையில் இல்லாமல் இருந்த இந்தக் கட்டடத்துக்கு அரசாங்கம் மாத வாடகையாக 21 மில்லியன் ரூபா செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி-6)



# தினம் தெரியுமோ?

ஒவ்வொரு நாளும் ஏதாவதொரு அக்சிடெண்ட் நடக்காட்டி மருதனார்மடம் சந்திக்கு பத்தியப்படாது. அந்தளவுக்கு அந்தச் சந்தியில அக்சிடெண்ட் அமோகமா நடக்கும். அதுக்கு கனக்க காரணங்கள் இருக்குது. சந்திக்கு பக்கத்தில ரண்டு பெரிய பள்ளிக்கூடங்கள் இருக்கு. அதோட யாழ்ப்பாணத்திலேயே மரக்கறியள் கூட வாற மருதனார்மடச் சந்தையும் அதில தான். ஆஞ்சநேயர் கோயிலும் சந்தியோடதான் இருக்குது. இதுகள் பத்தாதெண்டு கொஞ்சம் தள்ளி டிப்பர்களையும் றோட்டுக்கரையில நிப்பாட்டி வைக்கிறதால, பாதி றோட்டில தான் போய்வரவேணும். இப்பிடி அந்த இடம் பலதரப்பட்ட ஆக்கள் எந்தநேரமும் போய்வந்துகொண்டே இருக்கிறதால, மருதனார்மடம் சந்தி எப்பவும் பிஸியாத்தான் இருக்கும். அதிலையும் பள்ளிக்கூடம் தொடங்கிற நேரமும், முடியிற நேரமும் அந்தச் சந்தியால போய்வாறதெண்டால் பெரும்பாடுதான். இப்பிடி நெரிசலுக்குள்ள அந்தரப்பட்டு வாகனங்கள் அங்கையும் இஞ்சையும் எண்டு மாறிமாறி முந்தேக்குள்ள அக்சிடெண்டுகள் வரத் தானே செய்யும்.

இப்பிடி வாகனங்களும், ஆக்களும் குவிஞ்சு கிடக்கிற மருதனார்மடம் சந்தியில ஒரு சிக்னல் போட்டிருந்தால், வாகனநெரிசலைக் கட்டுப்படுத்தி அக்சிடெண்டுகளையும் குறைச்சிருக்கலாம். ஆனால் ஏனோ இந்தச் சந்திக்கு ஒரு சிக்னலைப் பூட்டவேணுமெண்ட அக்கறை ஒருத்தருக்கும் வரேலை. சிலவேளை அப்பிடி அக்கறையிருந்தும், காசு ஒதுக்கப்படாததால பூட்டாமல் விட்டினமோ தெரியேலை. சரி, சிக்னல் பூட்டாட்டியும் பரவாயில்லை, வாகனங்கள் கூடுதலாப் போய்வாற நேரங்களிலையாவது சந்தியில பொலிஸ்காரரை விட்டு, நெரிசலை கட்டுப்படுத்தி ஒரு சீரா எல்லாரும் போய்வாறமாதிரிச் செய்யலாமெல்லோ. அதுக்கும் "பொலிஸ்காராரின்ர ஆளணி காணாது" எண்டு ஒரு காரணத்தை தூக்கிக்கொண்டு வருவினம். ஆனால் உண்மையில அப்பிடி பொலிஸின்ர ஆளணி காணாது எண்ட காரணத்தை ஏற்க ஏலாது. ஏனெண்டால் மருதனார்மடம் சந்திக்குப் பக்கத்தில ஒவ்வொரு நாளும் ஓட்டோவிலையோ, மோட்டார்சைக்கிளிலையோ ரண்டு மூண்டு பொலிஸ்காரர் அதடியில வந்து நிக்கத்தான் செய்யினம். ஆனால் அவை தங்கட பாடு, வாகனங்கள் தங்கடபாடு.

சந்திக்கு கிட்டவா பதுங்கி நிக்கிற பொலிஸ்காரர், ஆரும் ஹெல்மெட் போடாமல் வந்தாலோ இல்லாட்டி டொக்கிமெண்ட்ஸ் இல்லாமல் வந்தாலோ அவையை மட்டும் பிடிச்சு தங்கட பொக்கெற்றை நிரப்பிப்போட்டு போடுவினம். அங்கால சந்தியில வாகனங்கள் மோதுப்படுறதைப் பற்றியோ, நெரிபடுறதைப் பற்றியோ அவைக்கு ஒரு கவலையும் இல்லை. உங்கட பொக்கெற்றை நிரப்பிப்போட்டாவது, கொஞ்சம் இந்தச் சந்தியையும் கவனிக்கலாமெல்லோ. ஆரும் அக்கறையுள்ள அதிகாரியள் இந்த விசயத்தை பொலிஸ் மேல்மட்டங்களுக்குச் சொல்லி, சந்தியில 'ட்ரபிக்' பொலிஸை நிப்பாட்டி வைச்சு, போக்குவரத்தை சீராக்கினால் புண்ணியமாப் போகும்.




-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 09 . 1938



மறைவு
21 . 10 . 2024

## சங்கரப்பிள்ளை செல்வரத்தினம்

**(முன்னாள் வட பிராந்திய முகாமையாளர் - தேசிய லொத்தர் சபை)**

யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்வரத்தினம் கடந்த 21.10.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவி (கிளி) அவர்களின் அன்புக் கணவரும், இராணி, கமலாதேவி ஆகியோரின் சகோதரரும், றூபன்கோபிநாத் (Indonesia), கோபிநந்தா (Teacher - Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனித்தா, சிவஞானம் (Doctor) ஆகியோரின் மாமனாரும், அடிசான் (Pilot), றெய்சா, ரிஷபா (Doctor) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற வே.சண்முகநாதன் மற்றும் ஜோ.நல்லையா ஆகியோரின் மைத்துனரும், சிவபாக்கியம், சிறீலிங்கம், அமரர் மகாலிங்கம், இராஜமலர், அமரர் இராசலிங்கம், நேசமலர், சந்திரலிங்கம், அமரர் இரவிச்சந்திரன், சசீந்திரன் (Germany) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/1679) J-1

# மாவா பாக்கு விற்பனை; மக்கள் அசௌகரியம்

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் உள்ள பாக்கு விற்பனை செய்யும் கடைகளால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வியாபார நிலையங்களுக்கு வருகைதரும் இளைஞர்கள் தமது வாகனங்களை பிரதான வீதிகளை அண்டி நிறுத்துவதால் அந்தப் பகுதிகளால் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கின்றனர். இதனால் அடிக்கடி விபத்துகளும் நேரிடுகின்றன.

அதேவேளை குறித்த பாக்குவிற்பனை நிலையங்களில் போதையூட்டும் மாவா பாக்கு விற்பனை இடம்பெறுவதாகத் தெரிவித்து கடந்தகாலங்களில் வவுனியா பொலிஸாரால் சட்டநடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(சு-110)

# மணமகள் தேவை

01. நயினாதீவு - வேலணை, இந்து, கௌரவகுலம் 1995, பூரட்டாதி, B.Eng, Phd, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
02. குப்பிளான் - கொக்குவில் இந்து, கௌரவகுலம் 1990, கேட்டை, MBA Phd Director, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை - 46762
03. காரைநகர், இந்து, கௌரவகுலம், 1988, பரணி, Master Degree, Australia மணமகனுக்கு மணமகள் தேவை - 46660
04. வட்டுக்கோட்டை இந்து கௌரவகுலம் (V), 1986, மகம், BA (Hons), Msc London மாப்பிள்ளைக்கு பெண்தேவை
05. சாவகச்சேரி, இந்து கௌரவகுலம் (V) 1985 மிருகசீரிடம் A/L Switzerland மாப்பிள்ளைக்கு பெண் தேவை-29108
06. கோண்டாவில்-உரும்பிராய் இந்து கௌரவகுலம் (V) 1984, பரணி ACCA, BA (Hons), London மாப்பிள்ளைக்கு பெண் தேவை
07. நயினாதீவு-மல்லாகம், இந்து கௌரவகுலம் (V), 1991 சதயம் Bachelors Dip in HR, New Zealand மாப்பிள்ளைக்கு பெண் தேவை
08. சாவகச்சேரி இந்து கௌரவகுலம் (V) 1980 கார்த்திகை GCE (A/L), London மாப்பிள்ளைக்கு பெண் தேவை-28812
09. நீர்வேலி இந்து கௌரவகுலம் (V), 1974 அவிட்டம், A/L Germany, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை-28741
10. ஊர்காவற்றுறை-கைதடி இந்து கௌரவகுலம் 1981 பூராடம் BSc Engineering Phd USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை 28664

**S.Sharma J.P**
**www.thaalee.com**

போன் :- 077 539 3728
Whatsapp :- 077 803 8193

# முசலி பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்- 2025

முசலி பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகள் மற்றும் கோழியிறைச்சிக்கடைக்கான 2025ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2025 - 31.12.2025 ) கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 24.10.2024 - 18.11.2024 பி.ப 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 18.11.2024 பிற்பகல் 2.15 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :18.11.2024 பிற்பகல் 2.30 மணி (திங்கட்கிழமை)

கேள்விப்பிணைப்பணம், கேள்விப்பத்திரக்கட்டணம் ஆகியவைகளை முசலி பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் மு.ப 9.30 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை செலுத்தி கேள்வி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பத்திரங்கள் பூர்த்திசெய்யப்பட்டு "தலைவர்/செயலாளர், முசலிப் பிரதேச சபை, சிலாவத்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " .......மாட்டிறைச்சி கடைக்கான கேள்வி 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 18.11.2024 பிற்பகல் 2.15 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பத்திரங்கள் 18.11.2024ஆந் திகதி பிற்பகல் 02.15 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் பிற்பகல் 02.30 மணிக்கு முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள் .

சித்திகரமான கேள்விகாரர் 2025 ஆம் ஆண்டிற்கு முசலிப் பிரதேச சபை மாட்டிறைச்சிக்கடைகள் மற்றும் கோழியிறைச்சிக்கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்வி சபையால் / அரச விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

முசலி பிரதேச சபையினால் கேள்விகள் ஏற்கும் / நிராகரிக்கும் உரிமை தலைவருக்கும் கேள்விசபைக்கும் உரியது.


குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர் மற்றும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் கேள்விகோர அனுமதிக்கப்படமாட்டார்கள்

கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர கட்டணம் (ரூபா) | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு (ரூபா) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | வேப்பங்குளம் மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 11,000.00 | 568,337.00 |
| 02 | P.P.பொற்கேணி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5,500.00 | 284,834.00 |
| 03 | அகத்திமுறிப்பு மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 12,000.00 | 624,239.00 |
| 04 | பண்டாரவெளி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 9,500.00 | 481,822.00 |
| 05 | அரிப்பு மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 12,000.00 | 622,908.00 |
| 06 | சிலாவத்துறை மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 17,000.00 | 886,446.00 |
| 07 | கொண்டச்சி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 8,000.00 | 403,293.00 |
| 08 | மறிச்சுக்கட்டி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 13,000.00 | 689,458.00 |
| 09 | முசலி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5,000.00 | 272,855.00 |
| 10 | சிலாவத்துறை கோழியிறைச்சிக்கடை | 1000.00 | 1000.00 | 60000.00 |

**திரு.A.C. நஜீப்**
**செயலாளர்,**
**முசலி பிரதேச சபை**

# பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25.05.1936

உதிர்வு
06.11.2012

## அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன்

ஓய்வு நிலை அதிபர் அகில இலங்கை
சமாதான நீதவான் (J.P)
திதி : அபரபக்க அட்டமி (24.10.2024)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்.
காலனின் கட்டளையில் அமைதியாய் போனீர்கள்
வாழ்க்கைச் சக்கரத்தில் உயிர் உதிர்வு நிச்சயமானது என்றெண்ணி
பிரிந்து விட்ட எம் தந்தையின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**"சண்முக தீபம்"**
**இல 43/4 கலாசாலை வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**என்றும் மாறாத நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(CS/1658) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலநாதனுடன் சுவிஸ் தூதரகக் குழு சந்திப்பு

மன்னார், ஒக்.24

சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் ஜஸ்டின் பொய்லட் தலைமையிலான குழுவினருக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும் இடையில் மன்னாரில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.




இதன் போது கட்சியின் செயற்பாடுகள், மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தற்போதைய தேர்தல் நிலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் டானில் வசந்தும் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தார்.

(ச-25, 56)


## கண்ணீர் அஞ்சலி

### நடராஜா இராஜேஸ்வரன்

**அபிவிருத்தி இணைப்பாளர் (திட்டமிடல் கிளை)**



எமது பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி இணைப்பாளர் திரு நடராஜா இராஜேஸ்வரன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்

பிறப்பு 05.05.1971 — இறப்பு 23.10.2024

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்**

(CR56519) P-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 03 . 1940



இறப்பு 21 . 10 . 2024

### பண்டிதை நடராசா மங்கையற்கரசி

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும், 6ம் ஒழுங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதை நடராசா மங்கையற்கரசி கடந்த 21.10.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா (S.K. மாஸ்டர்) - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நடராசா (ஹாட்லிக் கல்லூரி , முன்னாள் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஞானசம்பந்தன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), சிவமலர் (அவுஸ்திரேலியா), சிவனருட்செல்வன் (ஆசிரியர் களு/ஜிலான் மத்திய கல்லூரி - பாணந்துறை), சிவசக்தி (ஆசிரியர் யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி (அவுஸ்திரேலியா), சிவபாதம் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), சிவமங்கை (உதவி அதிபர் கொ/ விவேகானந்தா கல்லூரி), தர்மலிங்கம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், தீவகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பண்டிதை புனிதவதியார் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சிவபாதவிருதயர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் சுந்தரமூர்த்தி (மொழிபெயர்ப்பாளர், அவுஸ்திரேலியா), அருணந்தி (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), வைத்தியகலாநிதி சிவனேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்), மகேஸ்வரி மற்றும் சிவரஞ்சினி (அவுஸ்திரேலியா), வைத்திய கலாநிதி சாலினி (அவுஸ்திரேலியா), செல்லையா (கணக்காளர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மயூரன், மாதங்கி, சியாமர், சுவாதி, சிவஹர்ஷினி, அமலன், தரசுதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**25, 6ம் ஒழுங்கை,**
**பலாலி வீதி, கந்தர்மடம்.**

(CS/56516) J-1

**தகவல்: குடும்பத்தினர்.**

## தேவை

வான் வியாபாரத்தில் உதவியாளர், காசு வசூலிப்பவர், கணினி தெரிந்தவர்கள்

தொடர்பு: **077 772 2215**

## மேற்பார்வையாளர் தேவை (VSO)

அங்கர் பாதுகாப்பு சேவையின் யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு பணியாளர்களை மேற்பார்வை செய்து நிர்வகிக்க கூடிய ஆற்றல் திறமைகள் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.எதிர்பார்க்கப்படும் ஆற்றல்கள் திறமைகள்

- யாழ் மாவட்டத்தில் எப்பகுதிக்கும் சென்றுவரக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.
- சிறந்த தேக ஆரோக்கியமும் நற்பண்புகள் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்
- பாதுகாப்பு சேவை தொடர்பான முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்
- வயது எல்லை 25-65 வரை.

நாட்டமுள்ளவர்கள் எமது தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொண்டு நேர்முக தேர்விலே பங்கு கொள்ள முடியும்.

அங்கர் பாதுகாப்பு சேவை,
வேப்பங்குளம், வவுனியா. தொடர்பு: **077 239 2850**

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 07 . 1956



உதிர்வு 24 . 10 . 2019

**அமரர் செபமாலை பிரான்சிஸ் (எஸ். இன்பம்)**

**(அந்திய கால சேவை உரிமையாளர்)**

வாழ்க்கை என்னும் பாதையிலே
எம்மோடு பயணித்த எமது ஐயாவே
இன்றுடன் ஐந்தாண்டு முடிந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு மறையாது ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

600/ 04 மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

குடும்பத்தினர்
077 711 1474
077 056 9633

(CS/56517) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவூட்டல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.24

யாழ்.மாவட்டச் செயலகம், மனிதவளப் பயிற்சி நிபுணத்துவ நிலையம் மற்றும் மட்டக்களப்பு நிபுணத்துவ நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த வாழ்க்கை வாழ்வதற்கான வலுவூட்டல் பயிற்சிவிப்பாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்ட முகாமைத்துவத்திறன் விருத்திப் பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பயிற்சி நெறியின் வளவாளராக இந்தியப் பயிற்றுவிப்பாளர் சீதாலக்ஸ்மி சிவகுமார் கலந்துகொண்டார். (ச-45-66,9)

# உளவள நலம் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஒக். 24

'வேலையில் உளநலம்' எனும் தொனிப்பொருளில் உலக உளநல நாள் மற்றும் தேசிய உளவளத்துணை நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை மருத்துவர் திருமதி வினோதா அச்சுதன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உளவியல், மெய்யியல் துறை தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி அபிராமி இராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் வரவேற்பு நடனம், குழு நடனம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் உளநலம் சார்ந்த போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(ரி-9)

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 09 . 1944



இறப்பு 23 . 10 . 2024

### வேந்திரமூர்த்தி நல்லம்மா

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேந்திரமூர்த்தி நல்லம்மா 23.10.2024 இறைவனடி சேர்ந்தார் காலஞ்சென்ற (ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு உத்தியேகத்தர்) வேந்திரமூர்த்தியின் அன்பு மனைவியும் நளினி, நவீனா, (யா/போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும்) இந்திரகாசன், வாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மரட்ணம், வனஜராஜா, கிருஷ்ணவேணி, வரப்பிரசாதம ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். கௌசிகன், கனிஸ்ரன், திஷான்னா, கனுசியா, தர்மிளன், பிரசோத், அஷ்வின், அஷ்விதா ஆகியோரின் போர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 22 குறசெற்வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10.00 மணிக்கு சித்து பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகன் வே.இந்திரகாசன்
077 349 9459

(CS 1689) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 04 . 1944



மறைவு 23 . 10 . 2024

### செல்லத்துரை தவராசா

சிவன் வீதி கோண்டாவில் வடக்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராசா நேற்று 23.10.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் பிரதீபன். ஜெனித்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜி. சிவராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷா. சாருஜா. ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற மகாலட்சுமி மற்றும் இராணிமலர். கனகாம்பிகை. மகேந்திரராசா மல்லிகாதேவி மன்மதராசா ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான யோகநாதன். நவபாலன் மற்றும் ரதிகுமரி. ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்தனரும் ஆவார்


அன்னாரின் இறுதிக்கரியைகள் நாளை (25.10.2024) வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் இல 69. துதிஅந்திகாலசேவை பிரதான வீதி. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் அஞ்சலிக்காகவும். தகனக்கிரியைகளுக்காகவும் கோண்டாவில் வடக்கு கலைவாணி மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கோண்டாவில் (CS 1139) V-1 த.பிரதீபன் (மகன்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1956



மறைவு 23 . 10 . 2024

### சின்னத்தம்பி அமிர்த்தலிங்கம்

மடடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வீதி. சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமிர்தலிங்கம் அவர்கள் நேற்று (23.10.2024) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-செல்லம்மா அவர்களின் அன்பு மகனும் முன்னாள் கிராமசேவகர் உத்தியோகத்தரும், அகில இலங்கை சமாதான நீதுவானும் ஆவார்.மட்டுவில் கிழக்கு வில்சன் சமூகநிலையத்தின் தலைவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று 24.10.2024 அன்று 12.00 மணியளவில் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சகோதரர்கள் (சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் மரத்தளபாட தொழிலகம்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 04 . 1948



மறைவு 22 . 04 . 2024

### அமரர் திருமதி லோகநாயகி நடராசா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி லோகநாயகி நடராசா நேற்று 23.10.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் நடராசா அவர்களின் அருமை மனைவியும் பூமணி, சுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான பரந்தாமன், மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நளாயினி, கோபிநாத் (மின்சாரசபை ஊழியர்) அன்புத் தாயாரும் ஜெயசந்திரன், சந்திரிகா தமயந்தி பாசமிகு மாமியாரும் ரித்திகன், சாதுர்யன், சக்ஷிகா, தியாரா ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (24.10.2024 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

077 283 2100
077 218 7372

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1683) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைசார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பென பதிவுசெய்யப்பட்ட அமைப்பொன்றும் இல்லை!

## பனை தென்னை வள அபிவிருத்தி சமாசம் விளக்கம்

உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில், 'செல்வின் நியமனம்: மறுபரிசீலனை செய்க' என்ற தலைப்பில் வெளியான செய்திக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

'பனைசார் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு' என்ற அமைப்பே, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் விஜித ஹேரத்திடம், செல்வினின் நியமனத்தை மறுபரிசீலனை செய்யுமாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு எந்தவொரு 'பதிவு செய்யப்பட்ட' அமைப்பும் தமது ஒரு பகுதியாகவோ அல்லது தமக்குக் கீழோ இயங்கவில்லை என்றும் யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

### இலங்கையில்...

துள்ளன. இலங்கையில் சுற்றுலாத் தலங்களை இலக்குவைத்து பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று நேற்று வெளியான புலனாய்வுத் தகவல்களைத் தொடர்ந்து ஒருவித பதற்றநிலை நாட்டில் தொற்றிக் கொண்டுள்ள நிலையிலேயே, இலங்கைக்குப் பயணிக்கத் திட்டமிட்டவர்களுக்கு பயண எச்சரிக்கையையும், இலங்கையில் இருக்கும் தமது குடிமக்களுக்குப் பாதுகாப்பு எச்சரிக்கையையும் இந்த நாடுகள் விடுத்துள்ளன.

எனினும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைப் பேணுவதிலும் உறுதிப்படுத்துவதிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-ம)

### நாய்...

குறித்த இளைஞர் கடந்த 20ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தவேளை நாய் ஒன்று குறுக்கே சென்ற நிலையில் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார். பின்னர் மாஞ்சோலை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சையின்போது அவர் நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டுள்ளார். (அ-ம-26-27)

### அறுகம்குடா...

இஸ்ரேலியர்கள் அதிகம் விரும்பும் பகுதியாக மட்டக்களப்பு அறுகம்குடா காணப்படுகின்றது. அத்துடன், இஸ்ரேலியர்களின் கட்டுமானங்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இஸ்ரேல் அல்லது யூத எதிர்ப்பு மனோநிலையின் விளைவாகவே இந்தத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது. அது தொடர்பான எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டுள்ளன.

அறுகம்குடா பகுதிக்கு, பயங்கரவாத அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதை பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவா உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அறுகம்குடா பகுதியில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவுவதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து, அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். வீதித் தடுப்புகள் வைக்கப்பட்டு பாதுகாப்புச் சோதனைகள் நடத்தப்படுகின்றன. ஆனால், இந்தப் புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் பொதுமக்கள் அச்சமடைய வேண்டிய அவசியம் இல்லை. நாட்டில் வேறெந்தப் பகுதியிலும் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட உள்ளது - என்றார். (அ-ம)

### சிறைக்...

நேற்றுப் புதன்கிழமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மருதங்கேணிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு ஒரு மாத காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்த விளக்கமறியல் காலம் முடிவடைந்த நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது, அவரின் விளக்கமறியல் காலத்தை நவம்பர் மாதம் 6 ஆம் திகதிவரை நீடிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்தே, அவர் தனது உடைமையில் மறைத்து எடுத்துவந்த சிறிய வகை கத்தி ஒன்றினைப் பயன்படுத்தி தனது கழுத்தை அறுத்தும் கை பகுதியில் வெட்டியும் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

சிறையில் கைவினைப் பொருட்களை செய்வதற்காக கைதிகளுக்கு வழங்கப்படும் சிறிய வகை கத்தி ஒன்றினையே குறித்த சந்தேகநபர் தனது உடைமையில் மறைத்து எடுத்து வந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-100)

### வேட்புமனுவை...

வேட்புமனு தாக்கல்செய்யப்பட்டபோது, சில குறைபாடுகள் உள்ளதாகச் சுட்டிக்காட்டி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த முடிவுக்கு எதிராக ஜனநாயகத் தேசியக் கூட்டணி உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தது. வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் உடனடியாக வேட்புமனுவை உள்ளீர்க்குமாறு வன்னி மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உத்தரவிட்டுள்ளது. (அ-ம-66-20)

### முன்னாள்...

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு தாக்கல்செய்துள்ள வழக்கில் ஆஜராகத் தவறியமை தொடர்ந்து நீதிமன்றம் நேற்றுக்காலை அவருக்கு எதிராகப் பிடியாணையைப் பிறப்பித்திருந்தது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டு சில மணி நேரத்தின் பின்னர், கொழும்பில் ஹோட்டல் ஒன்றின் வாகனத் தரிப்பிடத்திலிருந்து மீட்கப்பட்ட, சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கார் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையான போதே அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-44)

### போதை...

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார தலைமையில் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 28 வயதுடையவர் என்றும், அவருக்கு போதை மாத்திரை தொடர்பான வேறு வழக்குகள் உள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-20)

### வெளிவிவகார...

உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த முன்னாள் அமைச்சரும், பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான கம்மன்பிலவே, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான அநுரவின் அரசாங்கத்தில் சுமந்திரன் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலின் பின்னர் அமையவுள்ள புதிய அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சு பதவி, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்படவுள்ளது என்று எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அரசாங்கத்தில் இணைய வேண்டுமாயின் தமது இரண்டு நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும்படி தமிழரசுக் கட்சி முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். இதையடுத்தே சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது - என்றார். (அ-ம-44)

### வடக்கின்...

தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த ஜூலி சங் தனது பயணத்தின் பிரதான பகுதியாக வடமாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே, அவர் வடக்கின் அபிவிருத்திக்கு உதவுவதாக வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் வடமாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், வடக்கில் ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமையக் காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த ஆளுநர் வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகள், சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் பெரியளவில் காணப்படுவதாகவும் அவற்றைத் தீர்ப்பதற்குத் தற்போதுள்ள அரசாங்கத்துடன் கலந்தாலோசித்துச் சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் வடக்கு ஆளுநர் குறித்த சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம் கேட்டுக் கொண்டார். வடக்கு ஆளுநரிடமிருந்தும் ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார். (அ-ம-66-20-26)

### வேட்பாளர்....

நாடாளுமன்றத் தேர்தலில் தபால்பெட்டி சின்னத்தில் வேட்பாளராகக் களமிறங்கிய இளம் வேட்பாளர் செந்திவேல் தமிழினியன் (வயது - 32) நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

அங்கஜன் இராமநாதன் தலைமையிலான ஜனநாயகத்தேசியக்கூட்டணியின் தபால்பெட்டிச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டிருந்தார். அவரின் மறைவுக்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார். (அ-ம-26-66-100-20)

### இலங்கையிலிருந்து...

வைத்தே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்று உளவுத் தகவல்கள் வெளிவந்ததையடுத்தே, இலங்கையில் இருந்து வெளியேறி உடனடியாக நாடு திரும்புமாறு இஸ்ரேலின் பாதுகாப்புச் சபை தனது மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

மொசாட் அமைப்பைப் போன்றே, இஸ்ரேலின் தேசிய பாதுகாப்புச் சபையும் உளவுத் தகவல்களைத் தனது முதுகெலும்பாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், இஸ்ரேலியர்களை இலங்கையில் இருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்டுள்ள உத்தரவு மிகவும் பாரதூரமானதாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

# பிரதீபா விருதுக்கான போட்டிகளில் தென்மராட்சி மாணவர்கள் சாதனை

யாழ்ப்பாணம், ஒக்.24

புத்தசாசன சமய விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள கலாசார மத்திய நிலையங்களுக்கிடையிலான பிரதீபா விருதுக்கான போட்டி அளவெட்டி அருணோதயா கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

போட்டிகளில் தென்மராட்சி கலாசார மத்திய நிலைய மாணவர்கள் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கிராமியக் குழுப் பாடலில் ஆரம்பப் பிரிவு வரணி மாணவர்கள் முதலாமிடத்தையும், மிருதங்கப் போட்டியில் வரணி மாணவன் முதலாமிடத்தையும், கிராமியக் குழுப் பாடலில் கனிஷ்ட பிரிவு வரணி மாணவர்கள் இரண்டாமிடத்தையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர். அதேபோன்று கைதடி கிராமிய நிலைய மாணவர்கள் தில்லானா குழு நடனத்தில் முதலாமிடத்தையும், வாள் நடனத்தில் இரண்டாமிடத்தையும் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

(எ-25, 159)

**விற்பனைக்கு**
நல்ல நிலையில் உள்ள TOYOTO LH.20 Engine மற்றும் gearbox விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
077 005 0344


**Forwarded**
கட்டட நிர்மாணவேலைக்கு ஆட்கள் தேவை, மேசன், கூலி, டிரைவர் (Driver)
தொடர்புகளுக்கு:
076 760 0403

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1400/= France 2300/= Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
TCN Express
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
T.P - 077 755 4528

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1942.12.17

மறைவு 2023.11.05



### அமரர் கணபதி வேலாயுதம்

(24.10.2024)

கோடி ஆண்டுகள் ஓடியிங்கு
போனாலும் அழியாது
என்றென்றும்
அழகான உங்கள் நினைவுகள்


சித்தியம்புளியடி
தெல்லிப்பளை கிழக்கு

குடும்பத்தினர்

*ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக!*

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 02 . 1954



இறப்பு 23 . 10 . 2024

### பொன்னுத்துரை சண்முகராசா (பத்தர்)

வேளாதோப்பு கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சண்முகராசா நேற்று 23.10.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை பத்தர்- கனகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா பத்தர்- சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவானந்தம், காலஞ்சென்ற புஸ்பவதி, யோகராணி, காலஞ்சென்ற பிறேமாவதி ஆகியோரின் அன்புச் சகோரரும் காலஞ்சென்ற அகிலாண்டேஸ்வரி, திலகவதி, இராசபூபதி, ஜெயலட்சுமி, நடேசமூர்த்தி, பரமேஸ்வரமூர்த்தி, காலஞ்சென்ற தம்பிராசா, குமார் ஆகியோரின் மைத்துனரும் சுதாஜினி, சுபாஜினி, சுரேஸ், தர்சினி, சர்மிலா, அருணா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.10.2024) அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி மகேஸ்வரி (குஞ்சு)

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 30 . 10 . 1954



இறப்பு 23 . 10 . 2024

### அமரர் ஆனந்தராஜா பவானி

சொர்ணவடலி வீதி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், 279/6 ராஜாமில் வீதி கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தராஜா பவானிஅவர்கள் 23-10-2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் பவளம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற ஆனந்தராஜா அவர்களின் மனைவியும், சுஜிதா (சுவிஸ்), வேணுஜா, ஹெயிலஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேந்திரன் (சுவிஸ்), சுந்தரகுமார் (வேணுஜா நகை மாடம்), ரூபன் ஆகியோரின் மாமியும், சைந்தவி, ஸ்ரேயா, ஹரிஷ், குகன்யா, கஜிஸ்டா, கிஷான் மற்றும் நிஷாராவின் பாசமிகு அம்மம்மாவும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் ராஜ்குமார், சரோஜினி (டென்மார்க்), ரஜனி (சாவகச்சேரி), நந்தினி (ஜேர்மனி), இந்திரகுமார் (ஜேர்மனி), விஜயகுமார் (கனடா), சாந்தினி (கனடா), ஶ்ரீகர்ணகுமார் (கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் வியாழக்கிழமை 24-10-2024 அன்று ராஜாமில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.30 மணி அளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

279/6 ராஜாமில் வீதி
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்

சுஜிதா சுரேந்திரன் +41779049375
சுந்தரகுமார் +94 77 722 2091
ரூபன் +94 77 446 0241

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org